ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

अज्ञं पुत्रं यदि जनयिता सद्गुरौ स्थाप्य सद्यः
शिक्षापूर्वं विमलसरणौ नो नयेच्चेत्प्रयत्नात् ।
लोकैस्सर्वैस्सुतरिपुरिति क्रुध्यते यद्वदेवं
त्वत्पुत्रं मां मृड यदि जहास्यापतेत्तेऽपवादः ॥ १ ॥

அஜ்ஞம் புத்ரம் யதி ஜநயிதா ஸத்குரௌ ஸ்தாப்ய ஸத்ய:
ஶிக்ஷாபூர்வம் விமலஸரணௌ நோ நயேச்சேத்ப்ரயத்நாத் ।
லோகைஸ்ஸர்வைஸ்ஸுதரிபுரிதி க்ருத்யதே யத்வதேவம்
த்வத்புத்ரம் மாம் ம்ருட யதி ஜஹாஸ்யாபதேத்தேऽபவாத: ॥க॥

ஒரு பிதாவானவன் முட்டாளான தம் புதல்வனை தாமதிக்காமல் சிறந்த ஆசார்யன்வசத்தில் ஒப்பிவித்துசிக்ஷைசெய்து பிரயாசை எடுத்துக்கொண்டு நன்னெறியில்கொண்டுவாராமல் இருந்தானேயாகில் ஸகல ஜனங்களும் பிள்ளைக்குச்சத்ருவென்று அந்தத் தகப்பனை எங்ஙனம் கோபித்துக்கொள்வார்களோ, அங்ஙனம் ஹே ம்ருட! எல்லா உலகங்களுக்கும் சுகத்தையளிக்கும் சக்திவாய்ந்த ஹே பரமேசுவரா! உமது புத்திரனை என்னை தந்தையாகிய நீர் கவனிக்காமல் விட்டுவிட்டீரேயானால் உமக்கு உமது புத்திரனை கவனிக்காமல் அனாதரவாய்விட்டீர் என்கிற அபவாதம் உண்டாகும்.

எவ்விதப் பிரயாசை எடுத்துக்கொண்டாவது தம் குமாரனுக்கு நற்புத்தி புகட்டவேண்டுமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. உலகிலும் நடைபெற்று வருகின்றது. இவ்விதமிருப்பதை நீரும் அனுஷ்டிக்கக்கடமைப்பட்டவர். அவ்விதம் நீர் அனுஷ்டித்து எனக்குச் சிறந்த ஞானத்தை உண்டுபண்ணி ஸன்மார்க்கத்தில் செல்லும்படி செய்யாதிருந்தால் உமக்குக் கெட்ட பெயர் உண்டாகும் என்று ஒரு பக்தர் ஸ்ரீ சங்கரரைப் பிரார்த்திக்கிறார்.

சுபம்!

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

விபவ-௵ ஆடி-மீ ௧௧௨

"உபதேசபஞ்சகம்"

(304-வது பக்கத்தொடர்ச்சி.)

शान्त्यादिः परिचीयताम् ஶாந்த்யாதி³: பரிசீயதாம்

இவ்விதம் பகவத்பக்தி செய்துகொண்டுவந்தால் சித்தத்தி லுள்ள காம க்ரோதம் முதலான ஸகல தோஷங்களும் கிரமமாக விலகும். அவைகள் விலகினல் சித்தம் தோஷமில்லாமல் சுத்த மாயிருக்கும். அந்த ஸமயத்தில், அதை ஸரியான வழியில் திருப் பிக்கொண்டு வரவேணும். எப்படிக்கொண்டு வருகிறதென்ருல் சமம், தமம், திதிக்ஷை, முதலான அவச்யமாக இருக்கவேண்டிய ஆத்மகுணங்களை சித்தத்தில் நிலைத்திருக்கும்படி எப்பொழுதும் முயற்சிக்கவேண்டும். இவ்விதம் செய்து சித்தத்தில் சாந்திமுத லான குணங்கள் நிலையாக ஏற்பட்டால் ஸ்படிகம்போல் நிர்மல மாக ஆகி, ஆத்மஸ்வரூப தியானத்திற்கு அர்ஹமாக ஆய்விடும். உடனே என்னசெய்ய வேண்டுமென்ருல்,

कर्माशु सन्त्यज्यताम् கர்மாஶு ஸந்த்யஜ்யதாம்

சித்த சுத்திக்காக சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மாக்களை மறுபடியும் செய்துகொண்டு, காலத்தை வீணாக்கி ஜன்மாவையும் கெடுத்துக்கொள்ளாமல் அவைகளை சீக்கிரம் விட்டுவிடவேண்டும்.

न हि देहभृता शक्यं कर्म त्यक्तुमशेषतः ।

ந ஹி தே³ஹப்⁴ருதா ஶக்யம் கர்ம த்யக்துமஶேஷத: ।

அல்லது சரீரத்துடனிருக்கும் வரையில் ஸகல கர்மாக்களையும் விடுவதென்பது ஸாத்யமில்லை என்று கீதா சாஸ்திரத்தில் கூறி யிருப்பதற்கிணங்க ஸகல கர்மாக்களையும் விலக்க முடியாவிட்டா லும் அவச்யம் அனுஷ்டிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்ட கர்மாக்களை மாத்திரம் எதாகிலுமோர்பலத்தில் விருப்பங்கொண்டு

325

அனுஷ்டிக்காமல் மானிடப் பிறவிக்குற்ற கடமையைச் செய்ய வேண்டுமென்று மாத்திரம் கருதிச் செய்யவேண்டும். இவ்விதமே,

कार्यमित्येव यत्कर्म नियतं क्रियतेऽर्जुन ।
सङ्गं त्यक्त्वा फलं चैव स त्यागः सात्त्विको मतः ॥१८,९॥

கார்யமித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதேऽர்ஜுந ।
ஸங்க³ம் த்யக்த்வா ப²லம் சைவ ஸ த்யாக³: ஸாத்த்விகோ மத: ॥௧௮,௯॥

என்கிற இந்த சுலோகத்தினால் ஸ்ரீபகவானும் அர்ஜுனனுக்கு உபதேசித்திருக்கிறார். இதினால் எனக்குக் கர்மானுஷ்டானம்வேண்டியதில்லை என்று சில போலி வேதாந்திகள் கூறுவது, முற்றிலும் தவறென்று நன்கு வெளியாகின்றது. இவ்விதம் பலத்தில் விருப்பமின்றி அவசியம் அனுஷ்டிக்கவேண்டிய ஸ்வதர்மத்தை அனுஷ்டித்தபிறகு செய்யவேண்டியதென்ன என்பதையும் அறிவிக்கிறார்.

सद्विद्वानुपसृप्यताम् । ஸத்³வித்³வாநுபஸ்ருப்யதாம் ।

சிறந்த பண்டிதர் இருக்குமிடம் தேடிச்சென்று சிஷ்யன் இருக்க வேண்டிய முறைப்படி அடிபணிந்து பக்திச்ரத்தையுடன் அவர்களின் அனுக்ரஹ ரூபமான தத்வோபதேசத்தை எதிர்பார்க்கவேணும். இங்கு ஸத்வித்வான் என்று கூறியிருப்பதால் பரமாத்மஸ்வரூபத்தை நன்கறிந்தவரும் அதிகாரியானசிடனுக்கு விதிப்படி அதை உபதேசிக்கும் சக்திவாய்ந்தவருமான சிறந்த குருவாயிருப்பவரை அடையவேண்டுமென்று அறிவிக்கப்படுகின்றது.

நம்மால் அடையப்படும் குருவின் இலக்கணத்தை இவ்விதமிருக்க வேண்டுமென்று ஒரு பெரியார் மொழிந்திருப்பதை அடியில் வருமாறு காண்க.

उपसीदेद्गुरुं प्राज्ञं यस्माद्बन्धविमोक्षणम् ।
श्रोत्रियोऽवृजिनोऽकामहतो यो ब्रह्मवित्तमः ॥
ब्रह्मण्युपरतश्शान्तो निरिन्धन इवानलः ।
अहेतुकदयासिन्धुर्बन्धुरानमतां सताम् ॥

உபஸீதே³த்³கு³ரும் ப்ராஜ்ஞம் யஸ்மாத்³ப³ந்த⁴விமோக்ஷணம் ।
ஶ்ரோத்ரியோऽவ்ருஜிநோऽகாமஹதோ யோ ப்³ரஹ்மவித்தம: ॥
ப்³ரஹ்மண்யுபரதஶ்ஶாந்தோ நிரிந்த⁴ந இவாநல: ।
அஹேதுகத³யாஸிந்து⁴ர்ப³ந்து⁴ராநமதாம் ஸதாம் ॥

வேதங்களை அத்யயனம் செய்து அவைகளிற் கூறியவாறு அனுஷ்டிப்பவரும் பாபமற்றவரும், விஷயங்களில் இச்சையை அறவே விலக்கியவரும், ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவர்களுக்குள் சிறந்தவரும் பிரம்மஸ்வரூபானுஸந்தானத்தில் பற்றுதலுள்ளவரும் மிகவும் பொறுமையுடன் கூடியவரும், அக்னித்தணல் போல் பிரகாசிப்பவரும் இயற்கையில் கருணைக்கடலாயும் தம்மை வணங்குகிறவர்களான ஸஜ்ஜனங்களுக்குப் பந்துவாயும் எவர் விளங்குகிறாரோ, எவரிடமிருந்து ஸம்ஸார பந்தத்திற்கு விடுதலை ஏற்படுமோ, அவ்வித மஹானை குருவாக அடையவேண்டும். அந்த குருவினிடம் சிஷ்யன் சென்று எவ்விதம் அறிவித்துக்கொள்வதென்பதையும் அறிவிக்கிறார்.

तमाराध्य गुरुं भक्त्या प्रह्वप्रश्रयसेवनैः ।
प्रसन्नं तमनुप्राप्य पृच्छेत्ज्ञातव्यमात्मनः ॥

தமாராத்⁴ய கு³ரும் ப⁴க்த்யா ப்ரஹ்வப்ரச்ரயஸேவனை: ।
ப்ரஸன்னம் தமனுப்ராப்ய ப்ருச்சே²த்ஜ்ஞாதவ்யமாத்மன: ॥

முன் சொல்லப்பட்ட லக்ஷணம்பொருந்தியவரான குருவை வணக்கம், மரியாதை, பக்தி, சுச்ரூஷை இவைகளால் நன்கு ஆராதித்து ஸந்தோஷப்படும்படி செய்து சிஷ்யனுக்கு அனுக்கிரஹிக்க வேண்டுமென்று உத்ஸாஹத்துடனிருக்கும் ஸமயத்தில் அவரை அடைந்து தனக்கு அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்களை மேற்கூறப் போகிறபடி ப்ரச்னம் செய்யவேண்டும்.

स्वामिन्नमस्ते नतलोकबन्धो कारुण्यसिन्धो पतितं भवाब्धौ ।
मामुद्धरात्मीयकटाक्षदृष्ट्या ऋज्व्यातिकारुण्यसुधाभिवृष्ट्या ॥

ஸ்வாமின்னமஸ்தே நதலோகப³ந்தோ⁴ காருண்யஸிந்தோ⁴ பதிதம் ப⁴வாப்³தௌ⁴ । மாமுத்³த⁴ராத்மீயகடாக்ஷத்³ருஷ்ட்யா ருஜ்வ்யாதிகாருண்யஸுதா⁴பி⁴வ்ருஷ்ட்யா ॥

தம்மை வணங்கியவர்களுக்கு பந்துவாயும், கருணைக்கடலாயும் விளங்கும் ஹேஸ்வாமின்! ஸம்ஸாரமெனப் பெயர்வாய்ந்த கடலில் விழுந்து கஷ்டப்படும் என்னைக்கருணையென்கிற அமுதத்தை வர்ஷிக்கும் தங்களுடைய ருஜுவான கடாக்ஷ திருஷ்டியால் கரை ஏற்றவேண்டும்.

दुर्वारसंसारदवाग्नितप्तं दोधूयमानं दुरदृष्टवातैः ।
भीतं प्रपन्नं परिपाहि मृत्योः शरण्यमन्यद्यदहं न जाने ॥

துர்வாரஸம்ஸாரதவாக்நிதப்தம் தோதூயமாநம் துரத்ருஷ்டவாதை꞉ । பீதம் ப்ரபந்நம் பரிபாஹி ம்ருத்யோ꞉ ஶரண்யமந்யத்யதஹம் ந ஜாநே ॥

ஹே குரோ! விலக்கமுடியாத ஸம்ஸாரமென்கிற காட்டுத்தீயால் தாபத்தை அடைந்தவனையும், என்னுடைய பாபங்களாகிற காத்துக்களால் இங்குமங்கும் தள்ளப்பட்டவனையும், மிகவும் பயந்தவனையும், தங்களைச் சரணாகதியாக அடைந்தவனுயுமிருக்கும் என்னை தாங்கள் மிருத்யுவினிடத்திலிருந்தும், பாதுகாக்கவேண்டும். தங்களைத் தவிர்த்து ரக்ஷிக்கக்கூடிய வேறு ஒருவரும் எனக்கில்லை.

शान्ता महान्तो निवसन्ति सन्तो वसन्तवल्लोकहितं चरन्तः ।
तीर्णाः स्वयं भीमभवार्णवं जनानहेतुनान्यानपि तारयन्तः ॥

ஶாந்தா மஹாந்தோ நிவஸந்தி ஸந்தோ வஸந்தவல்லோகஹிதம் சரந்த꞉ । தீர்ணா꞉ ஸ்வயம் பீமபவார்ணவம் ஜநாநஹேதுநாந்யாநபி தாரயந்த꞉ ॥

வஸந்தகாலம்போல் ஸகல லோகங்களுக்கும் ஹிதத்தைச் செய்கிறவர்களும், மிகவும் சாந்தர்களாயும், மஹான்களான ஸத்துக்கள் வஸிக்கின்றார்கள். அவ்வித மஹான்கள் பயங்கரமான ஸம்ஸாரஸமுத்திரத்தைத்தாண்டினவர்களாயும், ஒருவிதமான காரணமுமில்லாமல் இயற்கையான கருணையால் பிறரையும், ஸம்ஸாரஸாகரத்திலிருந்தும் கரையேற்றுகிறார்கள்.

अयं स्वभावः स्वत एव यत्परश्रमापनोदप्रवणं महात्मनाम् ।
सुधांशुरेषः स्वयमर्ककर्कशप्रभाभितप्तामवति क्षितिं किल ॥

அயம் ஸ்வபாவ꞉ ஸ்வத ஏவ யத்பரஶ்ரமாபநோதப்ரவணம் மஹாத்மநாம் । ஸுதாம்ஶுரேஷ꞉ ஸ்வயமர்ககர்கஶப்ரபாபிதப்தாமவதி க்ஷிதிம் கில ॥

சந்திரனானவன் எங்ஙனம் கதிரவனுடைய கொடிய கிரணங்களால் நன்குதாபத்தையடையும்படிசெய்யப்பட்டபூமியை ரக்ஷிக்கிறானோ அங்ஙனம் மஹாத்மாக்களுக்கும் பிறருடையசிரமத்தைப்போக்குவதென்பது இயற்கையான ஸ்வபாவமாகும்.

(தொடரும்) உபபத்திராதிபர்.

328

ஸ்திரீசுவதந்திர விமரிசம்.

(286-வது பக்கத்தொடர்ச்சி)

पिता रक्षति कौमारे भर्ता रक्षति यौवने ।

पुत्रश्च स्थाविरे भावे न स्त्री स्वातन्त्र्यमर्हति ॥

பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா ரக்ஷதி யௌவநே ।

புத்ரஶ்ச ஸ்தவிரே பாவே ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யமர்ஹதி ।

ஸ்திரீகளின் சிறுவயதில் தகப்பனும், விவாகம் ஆனபிறகு புருஷனும், வயோதிகப்பருவத்தில் புத்திரனும் காப்பாற்றுகிறார்கள் என்பது. இவ்வளவு ஜாக்கிரதையாய் ரக்ஷிக்கப்பட்டும் அநேகக் கெடுதல்கள் அவர்களுக்குத் தெய்வகதியால் நேர்ந்து விடுகிறது. ஸ்திரீ ஜன்மத்தைக் காப்பாற்றுவதற்கே புருஷர்களை ஸர்வேசுவரன் சிருஷ்டித்திருக்கிறான். மேல்நாட்டு நாகரீகம் இவர்களுக்குப் பிரயோஜனப்படுமா? நம்முடைய மதமானது பாதிவ்ரத்யத்தை அடிப்படையாயுள்ளதல்லவா? தென்னாட்டில் எண்ணிறந்தபெரிய குடும்பங்கள் வரதட்சிணையினாலும், பலவித ஆடையாபரணங்களாலும், தரித்திரதசைக்கு ஆளாகிசிரமப்பட்டு வருவதைப்பிரத்தியக்ஷமாய்க் காணலாம் இதைக்கொண்டு புருஷர்கள் எவ்வளவு தூரம் ஸ்திரீகளுக்கு கட்டுப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லையா? இன்னும் எந்தவிதமான சுவதந்திரம் அபேக்ஷிக்கிறார்களோ விளங்கவில்லை. இவர்கள் கோரும் சுவதந்திரம் இவர்களுக்கே அனர்த்தத்தை உண்டுபண்ணும் என்று புலப்படவில்லைபோலும். இந்தக்காலத்தில் இவர்களுக்கு சுவாதந்திரியம் இல்லாமால் முறையே தகப்பனுக்கும், பர்த்தாவுக்கும், புத்திரர்களுக்குமடங்கி கௌரவமாய் வஸித்துவருவதே நன்மையானது.

(இன்னும் வரும்)

தி. ந. தாததேசிகாசாரியார்.

ஸ்வதர்மமே மோக்ஷஸாதனம்.

சிறிதளவாகிலும் ஞானமுள்ள மனிதன் ஒவ்வொருவனும் தன் தனது ஆசிரமதர்மத்தை விடாமல் அனுஷ்டித்தே தீரவேண்

டும். அஃது இல்லாமல் ஆசிரமவேஷத்தினுல் மாத்திரம் ஒருவித பலனுமுண்டாகமாட்டாது. எவ்விதமெனில் தேத்தாங்கொட்டையைத் தண்ணீரிலுறைத்தால் ஜலம் சுத்தமாகிறது. அவ்விதம் செய்யாமல் தேத்தாங்கொட்டை எனச்சொல்லிக்கொண்டதினுலோ, அல்லது அதைப் பார்த்ததினுலோ ஜலம் தெளிவடைவதில்லை. அதுபோலவே நான் கிருஹஸ்தன் அல்லது சன்னியாசி என்று வர்ணுச்ரமத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு அதின் வேஷத்துடன் மாத்திரமிருந்தால் போதாது; தனது வர்ணுச்ரம தர்மம் எதுவோ அதை ஸரியானபடி ஆசரித்துவந்தால்தான் அதன் பயனையடையமுடியும். இதில் கர்மம் சிறந்தது, ஞானம் சிறந்ததெனப் பற்பல அபிப்பிராயமுண்டாகின்றது. அவ்விஷயத்தை நாம் நுட்பமாக பார்க்குங்கால் இரண்டையுமங்கீகரிக்க வேண்டியதாகவே ஆகிறது. ஒருவன் ஸ்வதர்மத்தை முறைதவறுமல் செய்துவருவானுகில் ஞானம் தானுகவே உண்டாகும். அந்த ஞானமே மோக்ஷத்தையளிக்கும். ஆனுல் ஞானமுள்ளவர்கள் 'கர்மத்தினுல் யாதொரு பலனுமில்லை. ஞானமே மோக்ஷ ஸாதனம். அதனுல் ஞானத்தையே அநுஸரிக்கவேண்டுமெ'ன்பார்கள். இம்மாதிரியான பேதபுத்தியை விலக்கி சீர்திருத்துவதற்காகவே அர்ஜுனனைக் காரணமாக வைத்து பகவான் கீதையில் நன்கு உபதேசித்திருக்கிறுர். அதாவது அர்ஜுனன் தனது முன்னேர்களை வதைசெய்து அடையவேண்டிய ராஜ்ஜியசுகம் எனக்குத்தேவையில்லை என்று மனவருத்தத்துடன் நிற்குங்காலத்தில், பகவான் அர்ஜுனு! துக்கத்தைவிட்டு உனது வர்ணதர்மமாகிய யுத்தத்தைச் செய். இந்த ஸ்வதர்மத்தைச் செய்யாவிட்டால் உனக்கு நற்கதி கிடைக்கமாட்டாது. யாதொரு ஸங்கல்பமுமில்லாமல் தன் குலதர்மத்தைச் செய்துவந்தவன் பிரும்மபதத்தை அடைவான். ஆகையால் மிகச்சிறந்ததாகிய கர்மத்தின் பலனை விரும்பாமல் செய்கின்ற எந்தக் கர்மமும் மோக்ஷத்திற்கே காரணமாகின்றது. ஞானத்திற்கும் அதுவே காரணமாகும். ஞானமின்றி மோக்ஷம் பெறமுடியாது, ஆகையினுலே ஸ்வதர்மமாகிய கர்மத்தை என்னிடத்தில் மனம் வைத்துச்செய் என்றுர். அதையே உபதேசமாகப்பெற்று ஸ்வதர்மத்தை அநுஷ்டித்து மிக மேன்மை பெற்று விளங்கினுன். இக்கருத்தையே பகவான்,

वर्णाश्रमविधिं कृत्स्नं कुर्वाणो मत्परायणः ।
तेनैव जन्मना ज्ञानं लब्ध्वा याति परं पदम् ॥

வர்ணாச்ரமவிதிம் க்ருத்ஸ்நம் குர்வாணோ மத்பராயண: ।
தேநைவ ஜந்மநா ஜ்ஞாநம் லப்த்வா யாதி பரம் பதம் ॥

என்னிடத்தில் மனம்வைத்துத் தனது வர்ணாச்ரமதர்மங்களை விடாமல் செய்துவருகிறவன் இந்த ஜன்மத்தாலேயே கர்மானுஷ்டானத்தால் சித்தசுத்தியும் அதனல் ஞானமும் பெற்று பரம பதத்தை அடைகிருன் என்று உபதேசித்திருக்கிருர். இதனல் ஸ்வகர்மமே மோக்ஷஸாதனமென விளங்கிவருகிறது.

அது எவ்விதமென்ருல் நாம் நடக்கும்போது நமது நிழல் தொடர்ந்து எவ்வளவு வேகமாக நடந்தபோதிலும் அது நமது முன்பே போகுமேயல்லாது கூடவாமாட்டாது. ஆனல் நாம் சூரியனுக்கு நேராக அவனை உத்தேசித்து நடந்தோமானல் நிழலானது நம்மையே அனுசரித்து நமக்குமுன் செல்லாமல் காலடிக்குள் அடங்கிநிற்பதுபோல நமது பூர்வஜன்மகர்மவினையை வெல்லவேண்டுமானல் அதை அநுஸரித்துவந்தால் அது நம்மைப் பல கட்டுக்குள்ளாக்கி நமது ஞானத்தைக் கெடுத்துவிடும். ஆதற்காக நாம் சூரியனுக்கொப்பான காந்தியுள்ள ஞானத்தைப்பெறத்தக்கதாகிய ஸ்வகர்மத்தையே பெரும் முயற்சியுடன் செய்துவந்தோமேயானல், நம்மையனுசரித்து அடங்கிநிற்கும். சூரியனை உத்தேசித்து நடந்துபோகாதவனின் நிழலானது சலிக்கமாட்டாதது போல ஞானப்ராப்திக்கு விஹிதமான ஸ்வதர்மம் செய்துவாாதவனையும், கர்மம் விடமாட்டாது. அப்பொழுது அது நசிக்கவும் மார்க்கமில்லை. கர்மம் நசிக்காதவரை ஞானம் பெறவுமிடமில்லை. கர்மசக்தியை ஜெயிக்கவும் ஸாத்தியமில்லை, ஆனதுபற்றி மோக்ஷம் பெறவேண்டுமானல் ஞானமும், அதற்குச் சித்தசுத்தியும் அதற்கு ஸ்வகர்மானுஷ்டானமும், மிகவும் முக்கியம். அது எது போலென்ருல். காசிக்குப்போக உத்தேசம்கொண்ட ஒருவன் வழிமத்தியில் பற்பல இடங்களில் தங்கிச்சென்று தனது உத்தேச ஸ்தலமாகிய காசிக்குப்போய்ச் சேருவதுபோல. மனிதனின் ஜீவித உத்தேசத்தை முன்னிருத்தி அஃதை அடைவதற்காக நான்கு ஆச்ரமங்களிலும் தங்கி அதற்குற்ற தர்மவழியாகச்செல்லவேண்டுமென ஓர்வித மார்க்கமானது பகவானல் விதிக்கப்பட்

டிருக்கின்றது. அந்த ஆச்ரம நியமங்கள் யாவும், ஈசனால் ஆதி காலத்திலேயே விதிக்கப்பட்டிருக்கிறதனால் அவ்வழியே ஈசனது ஆக்ஞையென நமது முன்னோர்களும், பின்பற்றி நடந்துகிருதார்த்தர்களானார்கள். இதன் ரகஸியத்தைப் பகவான் பாகவதம் முதலியசாஸ்திரங்களின் வழியாக வெளியிட்டிருக்கின்றார்.

அதாவது குசேலனென்ற பிராம்மணன் ஒருவன் தனது 27-குழந்தைகளுடன் மிக வறுமையடைந்து கஷ்டப்பட்டுவந்த காலத்திலும் தனது பிராமண வர்ணதர்மம் வழுவாமலே நடத்தி வந்தார். அச்சமயம் வறுமையின் கொடுமையால் தனது பத்னி தயார் செய்துகொடுத்த அவலைக் கைக்கொண்டும், நமக்கு பகவானது தர்சனம் கிடைக்கப் போவதென ஆவல்கொண்டும் தனது குடும்பவறுமையைச் சிறிதும் மனதில் நினையாமல், துவாரகாபட்டணம் சென்று பகவானை ஸ்நேகத்துடன் தரிசித்து, பக்தியின் மிகுதியால் தான் கொண்டுவந்திருக்கும் அவலையும் கொடாமல் தனது வறுமையையும் வெளியிடாமல் நிற்க, பகவான் இவரது பக்தியையும், கஷ்டகாலத்திலும் ஸ்வதர்மம்விடாத மஹான் என்றதையும் வெளியிடக்கருதி,

ब्राह्मणो मम दैवतम् ப்ராஹ்மணோ மம தைவதம் ।

பிராம்மணன் எனக்கு தைவதம் என்று தனதபிப்பிராயத்தை வெளியிட்டு அவரைநன்குஉபசரித்து மனதாலும் எண்ணத்தகாத ஐசுவரியாதிகளை அளித்து, மேன்மைப்பெறச்செய்து, பரமானந்தமளித்தார். இன்னும் ஒரு நகரத்தில் அசுவதனென்ற பிராமணனொருவனும், பிரதத்தனென்ற க்ஷத்திரியனொருவனும் ஓர் குருவினிடம் கலைகள் புகன்று வந்தார்கள். பிறகு பிரதத்தனென்பவன் ராஜ்யாபிஷேகம்பெற்று அரசனானான். அசுவதன் தீர்த்தயாத்திரை செய்யச்சென்றான். இவ்விருவரும் வெகுகாலத்திற்குப் பிறகு ஓரிடத்தில் சந்தித்தார்கள். அப்போது அவர்களுக்குள் கர்மம், ஞானம் இவைகளைப்பற்றி பலமான வாதம் பிறந்தது' அதில் பிரதத்தன் அசுவதனை ஜெயித்துவிட்டான். இக்காரணத்தைக் குருவிடம் கேட்டுத்தெரிந்துகொள்ள வேண்டுமென்று மிக மனவருத்தத்துடன் அசுவதன் தன் குருவிடம்வந்து நடந்ததைச்சொல்லவே, குருவானவர் ஹே பிராம்மணா! பிரதத்தனது குலதர்மமான அரசுரிமைபெற்று நீதிமுறைப்படி ராஜ்யபரிபாலனம் செய்து ஸ்வதர்மத்தை விடாமல் அனுஷ்டித்துவருகிறான்.

நீயோவென்றால் உனது குலதர்மத்தை அனுஷ்டித்து வரவில்லை. ஏனென்றால் பிராமணன் பிரும்மசாரியாகவிருந்தால் குரு சுச்ரூஷை செய்துவரவேண்டும். இல்லாவிட்டால் கிரஹஸ்தாச்ரமம் புகுந்து அதற்குரிய தர்மங்களை அனுஷ்டித்துவரவேண்டும். அவ்வாச்ரமத்தில் பிரியமில்லாவிட்டால் வானப்ரஸ்தாச்ரமமடைந்து அவ்வாச்ரம தர்மத்தை ஆசரித்து வரவேண்டும். இல்லாவிட்டால் சன்யாசம்பெற்று அதற்குற்ற தர்மத்தை வழுவாமல்செய்து வரவேண்டும், நீயோ உன் குலதர்மத்தில் ஒன்றையும் அனுஷ்டிக்காமல் தீர்த்தயாத்திரைசெய்து காலத்தைக்கழித்துவிட்டாய். ஆனதால் ஸ்வதர்மானுஷ்டானத்தை ஸரியாகச்செய்துவராதகாரணத்தினால் உனக்குஞானம் பிறக்கவில்லை. ஞானமில்லாதவன்எந்தக்கர்மத்தையும் ஸாதிக்கமாட்டான். ஆதலால் நீ க்ருஹஸ்தாச்ரமம் பூண்டு ஸ்வதர்மத்தை விடாமல் நடத்திவந்தால், ஞானம்பெற்று மேன்மை பெறுவாய் என்று உபதேசித்தார், அவனும்அவ்விதமே நடந்து மேன்மையடைந்தான். இதனாலும் ஸ்வதர்மமே தனது உண்மையான சக்தியாகின்றது. இன்னும் கௌசிகனென்றபிராமணனொருவன் தவம் செய்துவந்தான். ஒருக்கால்அவன் ஓர் மாத்தடியில்உட்கார்ந்திருக்க ஒருகொக்கானதுஅவன்பேரில்அசுத்தம் செய்துவிட்டது. அதைக்கௌசிகன் தனது உக்ரதிருஷ்டியால் பார்க்கவே, தவத்தின் மஹிமையால் அது எறிந்து போய்விட்டது. அதைக்கண்டு கௌசிகன் தனது தவம் பலித்துவிட்டதாக கர்வம் கொண்டான். பிறகு கௌசிகன் ஓர் கிராமத்தில் பிக்ஷைக்குச்சென்றான். அவ்விடத்தில் தன்து பர்த்தாவுக்கு சுச்ரூஷை செய்துகொண்டிருந்த ஸ்திரீயிடம் பிக்ஷை யாசிக்கவே' அவள் சிறிதுகாலம் நிற்கும்படி கேட்டுக்கொண்டாள். கர்வங்கொண்ட கௌசிகன் தவமஹிமை பொருந்திய நம்மைக் காக்கவைத்தவளைத் தண்டிக்க வேண்டுமென்று மனதிலெண்ணினான். உடனே அந்தஸ்திரீயானவள் "நான் கொக்கல்ல. உன் தவம்என்னிடத்தில் பயன்படமாட்டாதெ"ன்றாள் அப்போது நாம் கொக்கை எறித்த ரகஸ்யத்தை இவள் எவ்விதம் அறிந்தாளென ஆச்சர்யங்கொண்டு உபதேசம் செய்யும்படி வேண்டினான்.

அதற்கு அந்த ஸ்திரீ நான் ஸ்வதர்ம்ம மஹிமையால் உனது ரகசியத்தை அறிந்தேன். உனக்கு உபதேசம் பெறவேண்டுமானால் சிறிது தூரத்தில் ஆடுகளை வதைத்து மாமிசத்தைவிற்று

ஜீவித்துவருகிற நீசன் ஒருவனிருக்கிறான். அவனிடம் சென்றால் உபதேசம் பெறலாமென்று சொல்லி அனுப்பிவிட்டாள். கௌசிகனும் அவ்விதமே நீசனைத் தேடிவரவே, அக்காலத்தில் அவன் ஆட்டு மாம்ஸத்தை விற்றுக்கொண்டிருக்கக்கண்டு,இவன் தான் அந்த ஸ்திரீ சொன்னவனென்று நினைத்துச்,சமீபம் செல்லவே,இவனைக்கண்டவுடன் இவன் கொக்கை எறித்த ரகசியத்தையும், ஸ்திரீக்கும், இவனுக்கும் நடந்த ஸம்பாஷணத்தையும், தன்னிடம் வந்த காரணத்தையும் உடனே சொன்னான். கௌசிகன் மிக ஆச்சரியமடைந்து, நீ எனது ரகசியங்களை எவ்விதம் அறிந்தாய் என்று கேட்கவே, நான் ஜீவவதையாகிய எனது ஸ்வதர்மத்தை அநுஷ்டித்து, மாதாபிதாக்களை ரக்ஷித்துவரும்மஹிமையால் அறிந்தேன் என்றான். இதனாலும் ஸ்வதர்மமே அழிவற்ற சக்தியாகின்றது. அவாவர்களின் ஸ்வதர்மமே விடாமல் அநுஷ்டிக்கத்தகுந்ததும், அதுவே சித்தசுத்திக்கும், ஞானத்திற்கும், மோக்ஷத்திற்கும் காரணமாகின்றதென ஸித்தமாகின்றது. வர்ணாச்ரம தர்மத்தை ஈசனது விதியெனப்பயந்து, பக்தியுடன் அநுஷ்டித்து வரும்பக்ஷத்தில் ஈசனருளால் பரம சக்திபெற்றவர்களாய் மேன்மை பெற்றுச் சுகம் பெறுவோமென்பதில் யாதொரு ஸந்தேஹமில்லையென சித்தம். சுபம்!

நித்திய கர்மமே முக்திஸாதனம்.

மானிடப் பிறவியிலுள்ளவர்களின் ஜீவன் பற்பல யோனி பேதங்களிலும் பல ஜன்மங்களைப்பெற்று அவற்றில் பலவித சுக துக்கங்களையும்அநுபவித்து, ஏதோ சிறு புண்ணியவிசேஷத்தால் இம்மானிட சரீரமும் அதிலும் மிக மஹிமை வாய்ந்த பிராமண சரீரமும் பெற்று, வேத விதியால் கட்டுண்டு தீர்க்க யாத்திரை செய்து வருகிறான். அவனை முக்திபெறச்செய்வது நமது கடமையேயாகும். முக்தி மார்க்கத்தை ரிஷிகள்,

नान्यो विमुक्तये पन्थाः मुक्त्वाऽऽश्रमविधिं स्वकम् ।
तस्मात् कर्माणि कुर्वीत तुष्टये परमेष्ठिनः ॥

நாந்யோ விமுக்தயே பந்தா: முக்த்வாऽऽச்ரமவிதிம் ஸ்வகம் ।
தஸ்மாத் கர்மாணி குர்வீத துஷ்டயே பரமேஷ்டிந: ॥

தன்தனது ஆச்ரமத்தின் விதி எதுவோ, அதைவிட்டுக் கடைத்தேற ஜீவனுக்கு வேறு மார்க்கமில்லை ஆகையால் ஸ்வதர்மமாகிய ஸத்கர்மங்களைப்பரமேசுவர திருப்திக்காகவே செய்து அவ்வழியாக ஜீவனைக்கடைத்தேறச் செய்யவேண்டுமென்று வகுத்திருக்கிறார்கள். இதனால் கர்மானுஷ்டானமே ஜீவன் முக்திக்கு மார்க்கமென விளங்குகின்றது. ஜீவன் விஷயமாக விசாரிக்கப் புகுந்தால் பிரும்மசிருஷ்டிக்குள்ளடங்கிய 84-லக்ஷம் ஜீவஜாலங்களிலும் மேன்மை பெற்றது மானிட ஜீவன். அதிலும் நான்கு வர்ண பேதங்களிலும் முதல் வர்ணமென்ற பிராமண ஜீவன் மிக மேன்மையுள்ளவன் என்று சாஸ்திரங்கள்,

बहुजन्मभवैः पुण्यैः भवेदेतादृशो द्विजः ।
न्यायात्स्यात् काकताळीयादस्यां भूमौ तु विप्रता ॥

பஹுஜந்மபவை: புண்யை: பவேதேதாத்ருசோ த்விஜ: ।
ந்யாயாத்ஸ்யாத் காகதாளீயாதஸ்யாம் பூமௌ து விப்ரதா ॥

வெகு ஜன்மங்களில் செய்த புண்ணியத்தின்பயனாக இப் புவியில் த்விஜன்என்ற நாமம்பெற்று விளங்கும்படியானமஹிமையானது ஏதோ நிமித்தமாக வந்து உட்கார்ந்த காகத்தின் காரணமாகப் பனம்பழம் பூமியில் விழுந்தன என்ற நியாயம் போல இப்புண்ணிய பூமியில் விப்ரஜன்மம் கிடைக்கப்பட்டிருக்கின்றதெனக்கூறுகின்றன. இதில்உயர்வு தாழ்வு சிருஷ்டிக்கக்காரணம்யாதென்றால்

यादृशं प्राक्तनं कर्म तादृशं विन्दते वपुः ।
भुङ्क्ते तदनुरूपाणि सुखदुःखानि वै ह्यसौ ॥

யாத்ருசம் ப்ராக்தநம் கர்ம தாத்ருசம் விந்ததே வபு: ।
புங்க்தே ததநுரூபாணி ஸுகது:கானி வை ஹ்யஸௌ ॥

முன்ஜன்ம கர்மமானது எந்த ஸ்திதியில் மீதியாக இருக்கின்றதோ, அதற்குற்ற சரீரத்தை ஜீவன் பெற்று சுகதுக்கங்களையனுபவிக்கிறானென்று சாஸ்திரங்கள் வெளியிடுகின்றன. ஆகவே ஜீவனுக்குப் புண்ணியம் மிகுந்தால் தேவசரீரமும், பாபம் மிகுந்தால் பசு, பக்ஷி, திரியக் ஜன்மமும், இரண்டும் சமமானால் மனித சரீரமும் ஏற்படுகின்றது. அதிலும் மூன்று வர்ண ஜீவனைவிட பிராமண ஜீவன் மிகவும் மேன்மை பெற்றறவன். என்பதற்கு வைத்தியனொருவன் அனேக மூலிகைகளைக் கொண்டு சாரமான ஓர் ஔஷதம் செய்வதற்கு அம்மூலிகைகளை விதிப்படி சுத்தி

செய்து, வீர்யமுள்ள ஔஷதமாக்கித் தகுந்த சமயத்தில் ரோகிக்குக் கொடுத்து ரோகத்தை நீக்கி மஹிமை பெறுவது போல, மூன்றுவர்ண ஜீவனும் அந்தந்த வர்ணத்துக்குவிதித்துள்ளமுறை தப்பாமல் தர்மங்களை அனுஷ்டித்து வந்தபின் பயனாக-சுத்தி அடைந்த மூலிகையைப்போல மேலான வர்ணத்தை அடைந்து, ரோக சாந்திக்குச்சாரமான ஔஷதத்தைப் போல- ஜனன மரண ரோகத்தை நீக்க முக்கிய சக்திவாய்ந்த பிராமண ஜீவனாய் புகழ்பெறுகிறான். அக்காரணம்பற்றியே பிராமண ஜீவன் மிக மேன்மைப் பெற்றவன் எனச் சொல்லப்பட்டது.

இவ்வித பரிசுத்தமான பிராமண ஜீவன் இந்த ஜன்மத்தில் செய்யும் கர்மவாசனையால் பாபம் அதிகப்பட்டுக் கெடுதல் அடைந்து விடக்கூடாதெனக்கருதி ஸர்வேசுவான்வேதசாஸ்திரங்களில் நான்கு வர்ணங்களையும், அவைகளின் அநுஷ்டான முறைகளையும் பலவிதமாகவே ஜீவன்முக்திமார்க்கமாக விதித்திருக்கிறார். இதனால் எந்த வர்ணத்திலுதித்தவனுக்கு எவ்வித தர்மம் கர்மங்கள் ஜீவன்முக்தி மார்க்கமாக விதித்திருக்கின்றனவோ, அவ்வழியாக நடந்து முக்திபெற வேண்டுமேதவிர, வேறு வழியாகஜீவனை முக்திபெறச் செய்யக் கருதினால் அது முடியாத காரியமாகும். உதாரணமாக தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை என நான்கு லோஹங்களையும் சுத்தி செய்வதற்கு ஜலம் மிகவும் முக்கியஸாதனமே, லோஹசுத்திப்பிரகாணத்தில் தங்கத்தைஜலத்தாலும், வெள்ளியை சாணம் ஜலம் இவைகளாலும், செம்பு. பித்தளைகளை புளி, மண், ஜலம், இவைகளாலும் சுத்திசெய்ய வேண்டுமென விதித்திருக்கிறது. இம்மார்க்கத்தை விட்டு தங்கத்தின் சுத்தியை செம்புக்கும், வெள்ளியின் சுத்தியை பித்தளைக்கும் எவ்வளவுகாலம் வரைச் செய்துவந்தபோதிலும் அந்த லோஹங்களுக்கு ஏற்பட்ட கல்மஷம் சிறிதும் போவதில்லை. அதனால் நற்காரியங்களுக்கும் உபயோகப்படுவதுமில்லை என்று நன்குஅறிந்தவிஷயமே. ஆனது பற்றி தனது வர்ண தர்மமே பாபவிமோசனம், பரிசுத்தம் மேன்மை இவைகளுக்கு முக்கிய காரணமென சித்தமாகிறது. தவிர மனித சரீர ஆரோக்கியத்துக்கு ரக்த சுத்தியே முக்கியகாரணம். அதுகெட்டுப்போய்விட்டால் பற்பல ரோகத்திற்குக் காரணமும் ஆகும். அதை சுத்திசெய்ய அடிக்கடி தகுந்த ஔஷதம் உட்கொள்வதுபோலவே ஜீவன்முக்தியைத்தடுப்பது அசுபவாசனை,

அதை ஜீவனிடம் சேராமல் தடுப்பதற்கு முக்கிய ஔஷதம் கர்மானுஷ்டானம். இதை அடிக்கடி சேவித்துவந்தால் அசுபவாசனை ஜீவனைச் சேரமாட்டாது. அதனால் ஜீவனும் கடைத்தேறிவிடுவான் இக்காரணத்தாலும் கர்மானுஷ்டானமே ஜீவனின் முன்னேற்றத்துக்குத் தகுந்த ஔஷதமாகிறது. ஆகவே பிராமண ஜீவனைக் கடைத்தேரச் செய்யச் சக்திவாய்ந்த சாதனம் எது என்றால் 8-வயது முதல் நமது ஜீவன் கடைத்தேருவதற்காகவே ஆசாரிய புருஷர் தனது ரிஷிகுல மரியாதைப்படிக்கு உபநயனம் என்ற காயத்திரீ மந்திர உபதேசகர்மாவைச் செய்துவைத்துப், பிறகு அதை அனுஷ்டிக்க வேண்டிய முறைமைகளையும் உபதேசித்து, மூன்று சந்தி சமயங்களிலும், ஜீவன் முக்திமார்க்கமான நித்தியகர்மத்தை அனுஷ்டித்து வரவேண்டுமென்று கட்டளை செய்திருக்கும் "ஸந்தியாவந்தனம்" என்ற கர்மமே முக்திக்கு முக்கியஸாதனம். இதைவிட்டு வேறு எவ்வித கர்மத்தை வெகுகாலம் அனுஷ்டித்து வந்தபோதிலும், அதுபயன் தாமாட்டாது. ஏனெனில் ரோகத்திற்கு ஔஷதமும் அந்த ஔஷதம் நற்பயனையளிக்கவேண்டுமானால் அதற்கு விதித்திருக்கும் பத்தியமுறையும் மிகவும் முக்கியமாகும். இந்த பத்திய நியமத்தைக் கைக்கொள்ளாமல், பலநாளும் அளவுக்கு அதிகமாகவும் ஔஷதத்தை உட்கொண்டுவந்தபோதிலும் பத்திய நியமத்தைக் கைவிட்டதின் காரணமாக நல்ல ஆரோக்கிய பலனையும் கெடுத்து அபாயத்துக்குள்ளாக்குவது போலவே ஜீவனின் மோக்ஷத்தைக் கருதி செய்துவரும் சகல கர்மங்களும் ஓர் ஔஷதமாகவும், சந்தியாவந்தனம் என்ற நித்தியகர்மமே அதற்குப் பத்திய முறையாகவும் கருதவேண்டும். அதுதவறினால் ஜீவன் கதி அதோகதி ஆகிவிடும். தவிரவும் ஒரு சுவர் கட்ட வேண்டுமானால் அதற்கு அஸ்திவாரம் முன்பு அத்யாவசியமாவதுபோலவே ஒரு தினத்தின் நடுவாக ஜீவன் மோக்ஷத்தின் நிமித்தமாகச் செய்துவரும் எந்தக் கர்மத்துக்கும் முதன்மையாக ஸந்தியாவந்தன கர்மமும் அத்யாவசியமாகும். இக்கருத்தையே "ஈசாவாஸ்யம்" என்ற உபநிஷத்தானது 100-வயது வரை ஜீவித்திருக்க நியமம் பெற்ற மனிதன் தனது 100-வயது காலம் முடிவு வரையிலும் தன் வர்ணத்தாருக்கு விதித்திருக்கும் நித்திய நைமித்திகம் முதலிய ஸ்வதர்மங்களை சிறிதும் விடாமல் செய்துகொண்டே ஜீவிக்க வேண்டுமென்று

ஆசைகொள்ளவேண்டும். அது எதற்காகவென்ருல் புதிதான அசுபகர்மங்கள் இந்த ஜீவனைப்பற்றிக் கொண்டு இவனை ஜனன, மரண பந்தத்தில் உள்படுத்திவிடாமல் இருப்பதற்காக ஜீவித்திருக்கும் காலம் வரை ஸ்வதர்மானுஷ்டானம் செய்துகொண்டேயிருக்கவேண்டுமென்று கோஷிக்கின்றது. மேலும் நமது வஸ்திரமானது எப்போதும் பரிசுத்தமாக இருக்கவேண்டுமென்று மிகக் கவனமாகத் தோய்த்து அசுத்தத்தை நீக்கியும் புதிய அழுக்கு எருமல் இருப்பதற்காகவும் ஒவ்வொரு தினமும் சுத்திசெய்தும் வருவதுபோலவே, நமது ஜீவனும் எக்காலத்திலும் சுத்தனுகவே இருக்கக் கருதி சந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மங்களைப் பிரதிதினமும் செய்துவா வேண்டுமென்று வேதமும் முறையிடுகின்றது.

ஆனல் பல வர்ணங்களுக்கும் சுத்தி கர்மமானது பலவிதமாக வருவானேன் என்ருலோ? வாதம், உன்மாதம், சன்னிபாதமென்ற ரோகங்களுக்கு ஔஷதமும், சிகிச்சை முறையும் ஒன்ருக இருக்கவில்லை என்பது நன்கு அறிந்த விஷயம். வாதரோகத்துக்குள்ள சிகிச்சையை சன்னிபாத ரோகத்துக்குச்செய்தால் அது ஆபத்துக்கிடமாவதுபோல நான்கு வர்ணங்களுக்கும் பற்பல தர்மங்கள் விதித்திருக்கத் தனது வர்ணதர்மப்படி நடந்துவாாமல்அதற்கு வித்தியாசமாக நடந்தால் அதனல் கெடுதல்உண்டாகும் என்பதற்கு பகவான்

वर्णानामाश्रमाणाञ्च या मर्यादा मया कृता ।
तां ये समनुवर्तन्ते प्रसादस्तेषु सम्भवेत् ॥

வர்ணாநாமாச்ரமாணாஞ்ச யா மர்யாதா மயா க்ருதா ।
தாம் யே ஸமநுவர்தந்தே ப்ரஸாதஸ்தேஷு ஸம்பவேத் ॥

வர்ணுச்ரமங்களுக்கு யாதொரு தர்மநியமங்கள் என்னுல் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அவ்வழியை எவர்கள் அனுசரித்து நடந்து வருகிறுர்களோ, அவர்களுக்கு எனது அனுக்ரஹம் உண்டாகின்றது என்றும்,

स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ।

ஸ்வதர்மே நிதநம் ச்ரேய: பரதர்மோ பயாவஹ: ।

தன்து தர்மத்தை பெரிதெனக் கருதி, அனுஷ்டித்துவரும் ஒருவனுக்கு அதனல் கெடுதல் வந்தபோதிலும் நலமே, தனது தர்ம

த்தைவிட்டு அன்னிய தர்மத்தைக்கைக்கொண்டவனுக்கு அந்த தர்மமானது பயத்தைக் கொடுக்குமென்றும் உபதேசித்திருப்ப தால் பிராமண வர்ணத்தில் வந்துதித்த ஜீவனுக்கு முக்திக்கு முக்கிய ஸாதனம் நித்தியமாகிய சந்தியாவந்தனாதி கர்மங்களே என்று சித்தமாகிறது, சுபம்! K. S. சங்கரராமசாஸ்திரி,
கொட்டாரக்கரை.

காலத்தின் கொடுமை.

(286-வது பக்கத்தொடர்ச்சி)

किं नु मे स्यादिदं कृत्वा किं नु मे स्यादकुर्वतः ।
इति संचिन्त्य मतिमान् प्राज्ञः कुर्वीत वा न वा ॥

கிம் நு மே ஸ்யாதிதம் க்ருத்வா கிம் நு மே ஸ்யாதகுர்வத: ।
இதி ஸஞ்சிந்த்ய மதிமாந் ப்ராஜ்ஞ: குர்வீத வா ந வா ।

இதைச் செய்து எனக்கு ஆகவேண்டியது யாது? செய்யாவி டில் என்னநேரும் என்று புத்திமான் நன்கு ஆலோசித்தால், செய்வான் அல்லது விடுவான் என்று மூதுரைப்படி நமது தனி ஆலோசனைதான் சரியான வழிகாட்டும் இப்போது நாம் லோகவிஷயத்தில் எல்லோரும் ஆலோசிப்போமென்றால் அது ஒருபோதும் ஒவ்வாது. என் உலகில் நடக்கும் ராஜாங்க நட வடிக்கைகளும், நமது தேசியவழியும், 100-ல் 95-பெயர்களால் தெரிந்துகொள்ளப்படாமலே இருக்கிறது. இத்தொண்ணூற்றை ந்து பெயர்கள் என் செய்வார்கள். ஏதோ எப்போதும் போல் தானிருக்கிறதென்றெண்ணக் கூடும். அவர்களின் லாபநஷ்டத் தைப்பற்றி, ஐவருள் மூவர் இருவரே. வெளியில் வந்து நட வடிக்கையை எடுத்துரைக்கக்கூடும். அப்போது நாம் செய்வது என்ன, சொல்கிறவனுடைய லோகானுபவத்தை ஆழ்ந்து யோ சித்த பிறகு அவனைப் பின்பற்ற ஆரம்பிப்போம். அதுபோல மதமென்பது ஓர் சமுத்திரம். இதனையறிந்தவர்களென்று நாம் நினைக்கிற மஹான்களை நாம் வணங்கிக் கேட்டால் அவர்கள் தங் களை ஒன்றுமறியாத மூடனெனக் கூறிக்கொள்வார்கள். அத் தகைய ஞானிகள் பல பெயர்களிருக்கலாம். மத சாஸ்திரத்திற் கும், லோக சாஸ்திரத்திற்கும், பகலுக்கும், இரவுக்கும் போல் வித்தியாசம் உண்டு. (தொடரும்) M.N. சுப்ரமணியசாஸ்திரியள்